# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2065/41 - 2018 අප්‍රේල් මස 05 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.04.05

*2065/41 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.பி. 15/2014*

**2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டம்**

இரண்டாயிரத்துப் பதின்நான்காம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 57 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 34 ஆம் பிரிவின் கீழ் நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையினால் ஆக்கப்பட்ட விதிகள்.

தவிசாளர்,
நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபை.

கொழும்பு,
*2018, மாச்சு 20.*

**விதிகள்**

1. இவ்விதிகள் 2017 ஆம் ஆண்டின் நிர்மாணத் தொழில் அபிவிருத்தி (ஒப்பந்தக்காரர்களின் பதிவேடு) விதிகள் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகார சபையானது ஒப்பந்தக்காரர்களின் பதிவேடு ஒன்றைப்பேணுதல் வேண்டும்; அதன் விபரங்கள் இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்படுகின்றன.



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

ஒப்பந்தக்காரர்களின் பதிவேட்டில் பேணப்பட வேண்டிய விபரங்கள்:-

1. ஒப்பந்தக்காரரின் பெயரும் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரியும்.
2. ஒப்பந்தக்காரருடன் தொடர்பு கொள்ளும் விபரங்கள்.
3. முகாமைப் பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அலுவலரின் பெயர்.
4. பதிவுசெய்தல் தரமும் விசேடத்துவமும்.
5. அத்தகைய ஒப்பந்தக்காரருக்கு குறித்தளிக்கப்பட்ட பதிவிலக்கம்.
6. பதிவுத் தேதியும் அத்தகைய பதிவு செல்லுபடியாகும் காலமும்.

*4 - 722/1*

---

*ச.வ.பி. 15/2014*

## 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டம்

இரண்டாயிரத்துப் பதின்நான்காம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 57 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 45 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையினால் ஆக்கப்பட்ட விதிகள்.

தவிசாளர்,
நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபை.

கொழும்பு,
*2018, மாச்சு 20.*

**விதிகள்**

1. இவ்விதிகள் 2017 ஆம் ஆண்டின் நிர்மாணத் தொழில் அபிவிருத்தி (தரமுகாமைத்துவக் கணக்காய்வாளர்கள் பதிவுசெய்தல்) விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. ஏதேனும் அடையாளங் காணப்பட்ட நிர்மாண வேலையின் தொழில்நுட்ப கணக்காய்வினை பொறுப்பேற்பதற்கு விரும்புகின்ற எவரேனும் ஆளை, இச்சட்டத்தின் கீழ் தரமுகாமைத்துவக் கணக்காய்வாளர் ஒருவராக அத்தகைய ஆளை பதிவுசெய்வதற்கு நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையினால் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான எவையேனும் விபரங்களுடன் சேர்த்து (இதற்குப் பின்னர் "அதிகாரசபை" எனக்குறிப்பீடு செய்யப்படும்) நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபைக்கு விண்ணப்பம் ஒன்றைச் செய்தல் வேண்டும்.

3. அத்தகைய ஆள் தேவைப்படுத்தும் தகைமைகள் பின்வருமாறு:

(அ) சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் தொழில்நுட்ப கணக்காய்வினை நிறைவேற்றுவதற்கான உயர்தொழில் தகைமைகள்;

(ஆ) இயைபான துறையில் பதினைந்து வருடங்களுக்கு குறையாத பட்டப்பின்படிப்பு அனுபவம்;

(இ) சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் தகைமைபெற்ற ஆள் ஒருவராக பதிவு செய்யப்படுதல்;

(ஈ) இயைபான கற்கைநெறியின் உயர்தொழில்சார் நிறுவகத்தின் அல்லது பாராளுமன்றச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நிர்மாணத் தொழில் தொடர்பான ஏதேனும் பதிவுச்சபையின் கீழ் பதிவுசெய்யப்பட்ட கூட்டிணைப்பு உறுப்பினர்.

4. தரமுகாமைத்துவக் கணக்காய்வாளர் ஒருவராக அதிகாரசபையிடம் பதிவுசெய்யப்பட்ட எவரேனும் ஆள் இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறு ஏற்புடையற்பாலதான பதிவுக் கட்டணக் கொடுப்பனவின் மேல் பதிவு இலக்கத்தைக் குறித்தளித்தல் வேண்டும் என்பதுடன் பதிவுச் சான்றிதழில் குறித்துரைக்கப்பட்டவாறான காலப்பகுதி ஒன்றிற்கு செல்லுபடியாக வரவேண்டிய அத்தகைய சான்றிதழ் ஒன்றும் வழங்கப்படுதலும் வேண்டும்.

5. அதிகாரசபையிடம் பதிவுசெய்யப்பட்ட தரவுமுகாமைத்துவக் கணக்காய்வாளர் ஒவ்வொருவரும் அத்தகைய பதிவு முடிவுறும் தேதிக்கு முன்னர், அத்தகைய சான்றிதழைப் புதுப்பிப்பதற்கு இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறு புதுப்பித்தல் கட்டணத்துடன் சேர்த்து அதிகார சபைக்கு விண்ணப்பம் ஒன்றைச் செய்தல் வேண்டும்.

6. இவ்விதிகளின் நோக்கத்திற்காக -

"அடையாளங்காணப்பட்ட நிர்மாண வேலை" என்பது 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தில் உள்ளவாறான அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"தகைமைபெற்ற ஆள்" என்பது 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தில் உள்ளவாறான அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"தொழில்நுட்பக் கணக்காய்வு" என்பது 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தில் உள்ளவாறான அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| பதிவுக்கட்டணம் | - | ரூபா 30,000/- (வரிகள் நீங்கலாக) |
| வருடாந்த புதுப்பித்தற் கட்டணம் | - | ரூபா 5000/- (வரிகள் நீங்கலாக) |

4 - 722/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.